# பெப்ரவரி - 20 - திங்கள்

**அருளாளர்கள் பிரான்சிஸ் மற்றும் ஜசிந்தா**
**“நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்” (மாற்.9:23)**

---

## முதல் வாசகம்: சீராக்கின் ஞானம்1:1- 10

எல்லா ஞானமும் ஆண்டவராகிய கடவுளிடமிருந்து உண்டாகி, அவருடன் என்றென்றைக்கும் நித்தியமாய் இருக்கின்றது.கடல் மணல்களையும் மழைத்துளிகளையும், உலகத்தின் நாட்களையும் கணக்கிட்டவன் யார்? வானத்தின் உயரத்தையும் பூமியின் அகலத்தையும் பாதாளத்தின் ஆழத்தையும் அளந்தவன் யார்? எல்லாவற்றிற்கும் முன்னிருந்த கடவுளின் ஞானத்தைக் கண்டு பிடித்தவன் யார்? எல்லாவற்றிற்கும் முன் ஞானம் உண்டாக்கப்பட்டது. காலத் துவக்கத்திலிருந்து விவேகமுள்ள அறிவு இருந்தது. வான மண்டலங்களில் வீற்றிருக்கும் கடவுளின் வார்த்தையே ஞானத்தின் ஊற்றும், அதனை அடையும் வழிகளே அவருடைய நித்திய கட்டளைகளுமாய் இருக்கின்றன. ஞானத்தின் அடித்தளம் எவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது? அதன் வியத்தகு பண்புகளை அறிந்தவன் யார்? ஞானத்தின் உணர்வு எவனுக்குத் தெரிவித்து வெளியாக்கப்பட்டது? அதன் பலவித வழிகளையும் கண்டு பிடித்தவன் யார்? எல்லாவற்றிற்கும் மேலான, எல்லாம் வல்ல படைப்பாளர் ஒருவர் இருக்கிறார். வல்லமையுள்ள அவ்வரசர் மிகவும் அஞ்சத்தக்கவர். தமது அரியணையில் வீற்றிருந்து ஆண்டு வரும் கடவுள் அவரே.அவரே தமது அளவில்லாப் பரிசுத்த ஆவியைக் கொண்டு அதை உண்டாக்கி, அறிவித்து வெளிப்படுத்தினார். ஏனென்றால், தமது எல்லாப் படைப்புகளிலும், எல்லா உயிரினங்களிலும் தமது விருப்பத்திற்கு ஏற்றபடி அதைப் பகிர்ந்திட்டார் தம்மை நேசிப்பவர்களுக்கு அதைக் கொணர்ந்தார்.

**பதில்பாடல்:** ஆண்டவரே ஆட்சி செய்கிறார். மாட்சியை ஆடையாய் அணிந்துள்ளார்.

## நற்செய்தி: மாற்கு 9: 14 – 29

இயேசு சீடரிடம் திரும்பி வந்தபோது பெருங்கூட்டம் ஒன்று அவர்களைச் சூழ்ந்து இருப்பதையும், மறைநூல் அறிஞர் அவர்களுடன் வாதாடுவதையும் கண்டார். மக்கள் அனைவரும் அவரைக் கண்டவுடனே திடுக்கிட்டு ஓடிவந்து வணக்கம் செய்தனர்.வர், ”எதைப்பற்றி வாதாடுகிறீர்கள்?” என்று அவர்களைக்கேட்டார்.கூட்டத்திலிருந்த ஒருவன் மறுமொழியாகக் கூறியது: ”போதகரே, ஊமைப் போய்பிடித்த என் மகனை உம்மிடம் கொண்டுவந்தேன். அது எங்கே அவனை ஆட்கொள்கிறதோ அங்கே அவனைக் கீழே தள்ளுகிறது. அவன் நுரைத்தள்ளிப் பல்லைக்கடித்து விறைத்துப் பைபோகிறான். அதை ஓட்டும்படி உம் சீடரைக் கேட்டேன். அவர்களால் முடியவில்லை.”அதற்கு அவர், ”விசுவாசமில்லாத தலைமுறையே, எதுவரை உங்களோடு இருப்பேன் ? எதுவரை உங்களைப் பொறுத்துக் கொண்டிருப்பேன்? அவனை என்னிடம் கொண்டு வாருங்கள்” என்றார். அவனை அவரிடம் கொண்டுவந்தனர். அவரைக் கண்டவுடன் பேய் அவனை அலைக்கழிக்க, அவன் தரையில் விழுந்து நுரைத்தள்ளிக்கொண்டு புரண்டான். அவர், ”இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாகிறது?” என்று அவனுடைய தகப்பனைக் கேட்க, அவன், ”சிறுவயதிலிருந்தே இப்படித்தான் இவனைத் தொலைக்க அந்தப் பேய் அடிக்கடி நீரிலும் நெருப்பிலும் தள்ளியிருக்கிறது. உம்மால் ஏதாவது செய்யக்கூடுமானால் எங்கள்மேல் மனமிரங்கி உதவிபுரியும்” என்றான். இயேசு அவனை நோக்கி, ”கூடுமானாலா? விசுவாசிப்பவனுக்கு எல்லாம் கூடும்” என்றார்.உடனே சிறுவனுடைய தகப்பன், ”விசுவசிக்கிறேன். என் விசுவாச மின்மையை நீக்க உதவிசெய்யும்” என்று கத்தினான். கூட்டம் தம்மிடம் ஓடி வருவதைக் கண்டு, இயேசு அசுத்த ஆவியைக் கடிந்து, ”ஊமைச் செவிட்டுப் போயே, உனக்குக் கட்டைளையிடுகிறேன்: இவனை விட்டுப் போ, மீண்டும் இவனுள் நுழையாதே” என்றார். அது கத்திக்கொண்டு அவனை மிகவும் அலைக்கழித்தபின் வெளியேறிற்று. பையன் பிணம் போலானான். அதைப் பார்த்த மக்கள் கூட்டம், ”இறந்துவிட்டான்” என்றது.இயேசுவோ அவன் கையைப் பிடித்துத் தூக்கினார். அவன் எழுந்தான்.அவர் வீட்டிற்குள் போன பின்பு, சீடர்கள், ”அதை ஓட்ட எங்களால் ஏன் முடியவில்லை?” என்று அவரைத் தனிமையாகக் கேட்டார்கள்.அதற்கு அவர், ”இவ்வகைப் பேய் செபத்தினாலன்றி வேறு எதனாலும் வெளியேறாது” என்றார்.

**தியானம்:** மனித வாழ்க்கையில் துன்பங்கள், சோதனைகள், வேதனைகள், இழப்புக்கள், நோய்கள், சாத்தானின் சூழ்ச்சிகள் போன்ற ‘செங்கடல்கள்’ முன்னின்று அச்சுறுத்தும் போது மனிதன் கடவுள் மீது தான் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் கைவிட்டுவிட்டு, கடவுளை நோக்கி அபயக்குரல் எழுப்புகின்றான். எகிப்திலிருந்து எங்களை அழைத்து வந்தது இந்த பாலைநிலத்தில் அழிப்பதற்காகவா (விப.14:11) என்று தன்னை விடுவித்து வழிநடத்தி வந்த இறைவன் மீது கொண்ட நம்பிக்கையை விடுத்து புலம்புவதற்கு ஆரம்பிக்கின்றான். தனக்குள் இருக்கும் கடவுள் உலகத்தில் இருக்கும் பிரச்சனைகள், சோதனைகள், சாத்தானின் சூழ்ச்சிகள் இவற்றைவிடப் பெரியவர், வல்லமை கொண்டவர் என்பதை மறந்து போகின்றான் மனிதன். எனவே தான் இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு சீடர்களைப் பார்த்து நம்பிக்கையற்ற தலைமுறையினரே என்று கடிந்து கொள்கின்றார். இயேசுவை நோக்கி கடலில் நடந்து சென்ற பேதுரு கடலில் எழும் அலைகளைப் பார்த்து அஞ்சி நடுங்கி மூழ்கிக் கொண்டிருந்தபோது இயேசு பேதுருவைப் பார்த்துச் சொன்னார், “நம்பிக்கை குன்றியவனே ஏன் ஐயம் கொண்டாய்” (மத்.14:31) என்று தன் கரங்களைக் கொடுத்து தூக்கிவிட்ட இயேசு நம் அருகிலும் நின்று நமது நம்பிக்கையின்மையை குணமாக்குகின்றார். கடலில் எழும் அலைபோல நமது வாழ்க்கையில் துன்பங்கள் வந்தாலும், சாத்தான் நம்மைச் சோதித்தாலும் என்றும் கைவிடாத இறைவன் நம்மோடு இருக்கிறார் நம்மைக் கைதூக்கிவிட. எனவே நமது வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் சாவால்களை நம்பிக்கையின் துணைகொண்டு எதிர்கொள்வோம். “ஆபிரகாம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்.” (உரோ.4:9) ஆபிரகாமைப்போல எந்நிலையிலும் நமது நம்பிக்கையை இழக்காமல் இம்மட்டும் உதவின இறைவன் இனியும் காத்திடுவார் நம்மை நமது நோய்களில் இருந்தும் சோதனைகள் மனக்குழப்பங்கள் சாத்தானின் சூழ்ச்சிகளில் இருந்தும் விடுவிப்பார் என்ற நம்பிக்கையோடு வாழ்வைத் தொடர்வோம். விசுவாசத்தினால் நீதிமான்கள் பிழைப்பார்கள் (அப.2:4)